பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
11 02 2025 **TUESDAY 7.15 PM**
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கல்வி, ஆராய்ச்சி, சுகாதாரம், யுனானி மருந்துகள் உற்பத்தி உள்ளிட்டவற்றில் உலகின் முன்னணி நாடாக இந்தியா திகழ்வதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

- இணையவழி குற்றங்களை தடுக்க நான்கு அம்ச திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- இந்தியாவில் முதலீடு செய்ய வருமாறு இஸ்ரேலிய நிறுவனங்களுக்கு மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் அழைப்பு விடுத்துள்ளார்.

- ஜம்மு காஷ்மீரில் அக்னூர் பகுதியில் பாதுகாப்புப்படையினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது கண்ணி வெடியில் சிக்கி இரண்டு வீரர்கள் வீரமரணமடைந்தனர்.

- ஆசிய கலப்பு குழு பேட்மிண்டன் போட்டிகள் சீனாவில் இன்று தொடங்கியது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<>>>>>**

கல்வி, ஆராய்ச்சி, சுகாதாரம், யுனானி மருந்துகள் உற்பத்தி ஆகியவற்றில் உலகின் முன்னணி நாடாக இந்தியா திகழ்வதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சர்வதேச யுனானி மருத்துவ தினத்தையொட்டி, நடைபெற்றுவரும் இரண்டு நாள் மாநாட்டை தொடங்கிவைத்து உரையாற்றிய அவர், இந்த மருத்துவமுறையை இந்தியா உட்பட மத்திய கிழக்காசிய நாடுகளில் பரவலாக காணப்படுகிறது என்று கூறினார்.

நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, யுனானி மருத்துவ முறைக்கான மருந்துகளை தயாரிப்பதில் ஆராய்ச்சியாளர்களும், மருத்துவர்களும் இணைந்து செயல்படுவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்தார்.

தேசிய சுகாதார கொள்கையின்கீழ், யுனானி மருத்துவ முறை உட்பட ஆயுஷ் மருத்துவ முறைகளை பிரபலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<>>>>>

மொழி வேறுபாடுகளை கடந்து மக்களை ஒருங்கிணைக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பாரிசில் நடைபெற்றுவரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர், அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளின் மறுசீரமைப்பிற்கு இந்த தொழில்நுட்பம் பெரிதும் உதவுவதாக தெரிவித்துள்ளார்.

நாட்டில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் முன்எப்போதும் இல்லாத வகையில் வளர்ச்சியடைந்து வருவதாக அவர் கூறினார்.

பிரான்ஸுடன் இணைந்து இந்த மாநாட்டை நடத்துவது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

விவசாயம், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் இந்த தொழில்நுட்பம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதில் செயற்கை நுண்ணறிவு முக்கிய பங்காற்றி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

இணையவழி குற்றங்களை தடுக்க நான்கு அம்ச திட்டங்களை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற உள்துறை அமைச்சகத்திற்கான நாடாளுமன்ற ஆலோசனைக்குழு கூட்டத்தில் பேசிய அவர், எல்லைகளை கடந்து இணையவழி குற்றங்களை முற்றிலும் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாட்டின் பாதுகாப்பான இணையவழி சேவையை உறுதி செய்யும் வகையில், மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இணையவழி குற்றங்களை தடுக்க மக்களிடையே விழிப்புணர்வு அதிகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

இணையவழி குற்றம் தொடர்பாக, 1 9 3 0 என்ற உதவி எண்ணை தொடர்புகொண்டு புகார் அளிப்பதை ஊக்குவிக்க வேண்டும் என்று திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

அரசியலமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஜிஎஸ்டி கவுன்சில், சரக்கு மற்றும் சேவை வரிக்கான பொருட்களின் வகைப்பாடுகள் மற்றும் வரி விகிதத்தை அமல்படுத்தி வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இதுதொடர்பான எந்தவொரு மாற்றமும் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் மட்டுமே முடிவு செய்யப்படுவதாக தெரிவித்தார்.

சரக்கு மற்றும் சேவைகளுக்கான வரி விகிதங்களில் மாற்றங்கள் செய்வது குறித்து ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்க மாநில நிதியமைச்சர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெரும்பாலான பொருட்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி குறைக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<>>>>>

பாதுகாப்பு, காப்பீடு, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, தொலைத்தொடர்பு, விண்வெளி ஆகிய துறைகளில் அந்நிய நேரடி முதலீடுகளுக்கான கொள்கைகளில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு 'Jatin Prasatha ' தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், வெளிப்படையான மற்றும் எளிமையான நடைமுறைகள் காரணமாக நாட்டின் அந்நிய நேரடி முதலீடு அதிகரித்து வருவதாக கூறினார்.

இதுவரை, 90 சதவீதம் அந்நிய நேரடி முதலீடுகள் பெறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புத்துறையில் 74 சதவீதம் அளவிற்கு அந்நிய நேரடி முதலீடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு Jatin Prasatha தெரிவித்தார்.

<<<<<>>>>>

இந்தியாவில் முதலீடு செய்ய வருமாறு இஸ்ரேலிய நிறுவனங்களுக்கு மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் அழைப்பு விடுத்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய - இஸ்ரேலிய வர்த்தக மன்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், இந்தியாவில் வர்த்தக வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளதாக கூறினார்.

தொலைக்காட்சி, மொபைல் போன் உள்ளிட்ட மின்னணு சாதனங்களுக்கான தேவை அதிகரித்து வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த பத்தாண்டுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் மக்கள் தொகை 140 கோடியாக உள்ளதை சுட்டிக்காட்டிய அமைச்சர், இதன்காரணமாக, சந்தை வாய்ப்புகள் அதிகரித்து வருவதாகவும் கூறினார்.

தொழில்நுட்பம் முதல் வீட்டு உபயோகப் பொருட்கள் வரை பல்வேறு துறைகளில் தேவைகள் அதிகரித்து வருவதாகவும், இதனை கருத்தில்கொண்டு இஸ்ரேல் நாட்டு தொழில் அதிபர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்றும் திரு பியூஷ் கோயல் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

சைக்கிள் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உற்பத்தியாளர்களை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற சைக்கிள் உற்பத்தியில் முன்னணியில் உள்ள நிறுவனங்களின் தலைவர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில், அனைத்து வயதுடைய மக்களும் சைக்கிள்

ஓட்டும் பழக்கத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் அதன் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கார்பன் உமிழ்வை குறைக்கவும், இது உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

இதனை முன்னெடுத்துச் செல்லும் வகையிலும், உடல்நலத்தை பேணும் வகையிலும் ஞாயிற்றுக்கிழமைதோறும் சைக்கிள் பேரணி நடத்தப்பட்டு வருவதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் அக்னூர் பகுதியில் கண்ணி வெடியில் சிக்கி இரண்டு வீரர்கள் வீரமரணமடைந்தனர்.

எல்லைப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தபோது கண்ணிவெடி வெடித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து, அப்பகுதியில் தீவிர தேடுதல் நடவடிக்கைகளில் பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - Song – 8 நொடிகள்)*

மகி பூர்ணிமா தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, பிரயாக்ராஜில் உள்ள திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவதற்கான முன்னேற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இதனையொட்டி, பத்து லட்சத்திற்கும் அதிகமானோர் புனித நீராட வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கென உத்தரப்பிரதேச மாநில அரசு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - Song – 8 நொடிகள்)*

<<<<<>>>>>

மிசோரம் மாநிலத்தில் பஞ்சாயத்துகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நாளை நடைபெறுகிறது.

544 கிராமப்புற பஞ்சாயத்து அமைப்புகளுக்கும், ஒன்பது மாவட்டங்களை சேர்ந்த 111 உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது.

இத்தேர்தலில் மொத்தம் 4 லட்சத்து 37 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இதனிடையே, ஆகாஷவாணி செய்தி பிரிவுக்கு பேட்டியளித்த அம்மாநில தேர்தல் அதிகாரி டாக்டர் 'Lal Thialgliana ' வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி, பிற்பகல் 4 மணிவரை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதில் பதிவாகும் வாக்குகள் நாளை இரவு ஏழு மணிக்கு தொடங்கி, முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவிற்கு உதவிடும் வகையில், 11 ஆயிரத்திற்கும் கூடுதலான ராணுவ வீரர்களுடன் 200 நீண்ட தொலைவு ஏவுகணைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வடகொரிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அணு ஆயுதங்களுடன் கூடிய நீர்மூழ்கி கப்பல்கள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் ஆகியவற்றை தயாரிப்பதற்கான நவீன தொழில்நுட்பங்களை ரஷ்யாவிடமிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கலப்பு குழு பேட்மிண்டன் போட்டிகள் சீனாவில் இன்று தொடங்கியது.

Qingdao நகரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், 12 அணிகள் பங்கேற்கின்றன.

இதில், இந்தியாவின் லக்ஷயா சென், ஹெச் எஸ் பிரணாய், மாலவிகா பன்சோத், சாத்விக் சாய்ராஜ், சிராக் ஷெட்டி, திரிஷா ஜாலி, காயத்ரி கோபிசந்த், அஷ்வினி பொன்னப்பா, தனிஷா கிறாஸ்டோ ஆகியோர் பங்கேற்கின்றனர்.

------------

தேசிய விளையாட்டு போட்டியில் தமிழகம் இன்று ஒரு தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

டேராடூனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் தமிழகத்தின் பத்ரிநாத் - லஷ்மி இணை, கர்நாடகாவின் நிக்கி – சோஹா சாதிக் இணையை நேர் செட்டுகளில் வென்று இப்பதக்கத்தை கைப்பற்றியது.

<<<<<END>>>>>